## காணாமல் போய் விடுவர்

## முன்னுரை

என் சாமி. எனது துரை. என் உயிர் நாயகர். இன்று வந்து என்னைத் திருமணம் செய்து கொள்ளவிருக்கின்றனர்.

அத்திருமணம் இரண்டரை நாழிகை அளவில் நடந்தேறும்.

அத்துடன் என் உடம்பிலும் உள்ளத்திலும் கலந்துகொண்டு பிரியாமலிருப்பர்.

இதுவே நான் பெற்ற உயிர் இரக்கத்தின் பயன். அனைத்துலகங்களும் அறிந்த செய்தியே இது.

அதனால் இம்மையின்பம், மறுமையின்பம், பேரின்பம் இனி யாவர்க்கும் கிடைக்கும்.

ஆதலின் சத்திய ஞானத்திருக்கோயிலை மணியாலும் பொன்னாலும் அலங்கரியுங்கள். இது சத்தியம்.

**வள்ளற் பெருமான்**

அதைப்பற்றி அவநம்பிக்கையுள்ளவர்கள் கால வெள்ளத்தில் காணாமல் கரைந்துபோய்விடுவர் என்பதைப் பற்றிச் சொல்ல வந்ததே இந்த நூல்.

**மன்ற ஆசிரியர் குழுவினர்**

**வள்ளலார் கொள்கை நெறிபரப்பு இயக்கம்**
**46, கோட்டக்கரை, வடலூர்.**

This e-book can be downloaded for free from
http://www.vallalar.org

# காணாமல் போய் விடுவர்

## 1. படிக்கும் முன்பு:

வையகத்தில் பிறக்கின்றோம்; வாழ்கின்றோம்; இறந்து போகின்றோம். இது காலம் காலமாக நடந்து வரும் செயல்கள்தான்.

காலம் காலமாக நடந்துவரும் இந்தச் செயல்பாட்டில் சிலர் சில சுவடுகளை உண்டாக்கிச் செல்கின்றனர். மிகச் சிலர் சாதனைகளைப் படைக்கின்றனர் மிக மிகச் சிலரே பயனுள்ள அருளாளராக வாழ்கின்றனர். அவர்களுள் தலைநின்ற பேரருளாளரே நம் இராமலிங்கப் பெருமான்.

அவர்களுடைய வாழ்க்கையில் எத்தனையோ சிறப்புகள் எத்தனையோ சாதனைகள்! எத்தனையோ அதிசயங்கள்! எத்தனையோ அற்புதங்கள்!

அவற்றுள் வெளிப்படையானவையும் உண்டு.மறைமுகமானவையும் உண்டு. தெரிய வந்தனவும் உண்டு. தெரிய வராதனவும் உண்டு.

அவற்றையெல்லாம் சரிவர தெரிந்து கொள்வது நமது கடமை. அப்படித் தெரிய வாராதபோது திருவருட்பா மூலமும் நெருங்கிய சீடர்கள் எழுதிய செய்திகள் மூலமும் நாம் தெரிந்து கொள்ளமுயலல் வேண்டும்.

அப்படித் தெரிந்து பின்புதான் வள்ளல் பெருமானின் சீரான. நேரான வளர்ச்சியைப் பற்றி ஏதேனும் சில உணர முடியும். உரைக்கமுடியும். அதுவும் காலவேகத்தில் அடித்துச் செல்லாதபடி அமைதல் வேண்டும்.

சென்ற நூற்றாண்டு வள்ளல் நேரிடையாக வாழ்ந்த நிலை: வள்ளல் ஒளியாக வெளியாக ஆனநிலை. அதற்குப்பின் நிலவி வரும் நடைமுறை. நிலை ஆகியவற்றைக் கணித்தவர்கள். கணிக்கக் கூடியவர்கள் மிகமிகப் பலர் இருக்கின்றனர்.

அவர்களுடைய கணிப்புகள் எல்லாம் ஒன்று போல இல்லை. 150 ஆண்டுகட்கு முன்பு வாழ்ந்தருளிய வள்ளல் வாழ்விலேயே எத்தனையோ மாற்றங்கள். ஏற்றங்களைச் சொல்லொ வருகின்றார்கள். அவைபற்றி எண்ணிப்பார்க்கும் விசுவாசத்தினை உடையதே இந்நூல்.

## 2. ஐயப்பாட்டின் ஆரம்பம்:

முதலில் வள்ளல் அவதரித்த சூழ்நிலை. மருதூர் கணக்குவேலை பார்க்கிறார் இராமையா! எளிய குடும்பம். ஐந்துமுறை திருமணம். சந்ததி இல்லை. ஆறாவது திருமணம். எங்கோ இருக்கும் சின்னகாவணம். அங்குப் பிறந்த சின்னம்மைக்கு நிலவரம் தெரியும். ஆனாலும் பெற்றவர்களின் விருப்பப்படியும் நிகழப்போகும் எதிர்கால விளைவையும் உறுதியுடன் ஏற்றுத் திருமணத்திற்கு உடன்பட்டார். இதுவே தமிழகத்தின் பண்புடைமை. அந்தப் பண்புடைமையின் அடிப்படையில் தான் வள்ளல் ஐந்தாம் பிள்ளையாக வந்து அவர்களுக்கு உதிக்கின்றார்கள்.

கருணீகர் மரபு பிற்படித்தப்பட்ட வகுப்பு. மாமிசம் உண்பவர்கள் மிகுதி. அதனாலேயே முன்னேற்ற வகுப்பினருடன் ஒத்து வாழமுடியாத நிலை. ஆறாம் மாதத்தில் தந்தையார் காலமாகிறார். வள்ளல் பிறந்த ஊரில் ஆதரவு குறைவு. சின்னம்மை பிறந்தகம் செல்கின்றார். அங்குச் சில ஆண்டுகள் வாழ்கின்றனர். பின்பு அனைவரும் சென்னை வந்து சேர்கின்றனர். இங்கிருந்துதான் ஐயப்பாடுகள்.

### 3. முதன் முதலில் பாடிய பாடல் எது?

படிக்கவேண்டிய நிலை இல்லை. அதனால் படிப்பில் கவனம் இல்லை. ஆசிரியரிடம் கேட்டு அறியும் தேவையும் இல்லை. கந்தகோட்டம் சென்றார். கடவுள் முருகனைக் கனிந்து பாடினார். அதுவே முதல் பாடல். அந்நூல் தெய்வமணி மாலை. இது சன்மார்க்க மரபினர் கூறிவரும் செய்தி.

வள்ளல் பெருமான் பலருக்கும் அறிமுகம் ஆனநேரம். அவரது தெய்வச் சிறப்பினை உணர்ந்தர் பாளையம் முத்து ரெட்டியார். அவர் கேட்டுக் கொண்டபடி இராமலிங்கப் பிள்ளை அவர்களால் கந்தர் தெய்வமணிமாலை இயற்றப்பட்டது. இது நூலின் முகப்புச் செய்தி. அப்படி இருக்க வள்ளல் பெருமான் முதன் முதலில் கந்தகோட்டம் சென்று முருகனைப் பாடி உருகினார் என்பது எப்படிப் பொருந்தும்?

### 4. திருமணத்திற்கு ஏன் உடன்பட்டார்?

வள்ளல் பெருமான் தீவிர தெய்வ உணர்வுள்ள மெய்ஞ்ஞானி. அப்படிப்பட்டவர் திருமணத்திற்கு ஏன் உடன்படவேண்டும்? ஏன் திருமணம் செய்யவேண்டும்? எனப்பலரும் கேட்டபடியே இருக்கின்றனர். இருப்பர்.

கடவுள் அருளைப் பெறுவதற்கு இல்லறமே சிறந்த வழி என வள்ளலுக்கு நன்றாகத் தெரியும். அதனால்தான் தமது 51 ஆண்டுகளில் 35 ஆண்டுகளைச் சென்னையில் அண்ணன் குடும்பத்திலும் ஏறக்குறைய 10 ஆண்டுகளைக் கருங்குழி மணியம் வீட்டிலும் சேர்ந்தே வாழ்ந்தருளினார்கள். மேலும் குடும்பஸ்த்தர் கூடலூர் அப்பாசாமி செட்டியார் பெயராலேயே தருமச்சாலை அழைப்பும் அனுப்பப் பெற்றுள்ளதைக் கவனிக்க வேண்டும்.

இல்லறம் மேற்கொள்வதை வள்ளல் வெறுக்கவில்லை. அதனால் அந்தத் திருமணம் உலகத் திருமணங்களைப் போல் இருக்கக்கூடாது என்று கருதினார். தமக்குத் திருமணம் வேண்டியதில்லை என்றால் இறைவனே தடுப்பான் என்றும் நம்பியிருந்தார். ஆனால் நடந்ததுவேறு விதமாகிவிட்டது! திருமணம் செய்தபின் மலை, குகை, ஆசிரமம், ஆதினம், மடம், மண்டபம், காடு, கரம்புக்கு வள்ளல் சென்றுவிடவில்லை. துறவு பூணவில்லை என்பதையும் எண்ணிப் பார்க்கவேண்டும். ஆதலின் சுந்தரமூர்த்தி நாயனார் திருமணம் தடைப்பட்டது போல தன் திருமணம் தடைபடக்கூடும் என எதிர்பார்த்து இருந்தார்கள். ஆனால் திருமணம் தடைபடவில்லை. எனவே அண்ணன், அண்ணி, தமக்கை, அத்தான், தாயார் தனக்கோடியாருடனே சேர்ந்து வாழ்கின்றார். குடும்பத்தில் சிறு சலனம் உண்டாகக்கூட வள்ளல் இடந்தரவில்லை. எந்நேரமானாலும் இரவில் வீடு வந்தே உண்ணும் நினைப்புள்ளவர் என்பதே அதற்குப் போதுமான சான்று. ஆதலின்

அற்புதம் நிகழும் என்பதை எதிர்பார்த்தே வள்ளல் திருமணத்திற்கு உடன்பட்டார்கள்.

### 5. கட்டிய மனைவியைக் கைவிடலாமா?

கட்டிய மனைவியைக் கைவிட்டது பாவம் என்கிறார்கள். இராமன் உள்ள இடம்தான் சீதைக்கு அயோத்தி. வள்ளல் உள்ள இடந்தானே தனக்கோடிக்குச் சொர்க்கம். அந்த மரபினை யார் மீறியது? வள்ளலா? தனக்கோடியா? ஒரு இராமகிருஷ்ணர் ஒரு சாராதமணி சிற்றினபமின்றி ஒன்றுபட்டு வாழ்ந்ததுபோல் தனக்கோடி ஏன் செய்ய முடியவில்லை? சிற்றின்ப எதிர்பார்ப்பு முதலிய உலக போகங்களைத் தனக்கோடி எதிர்பார்த்தால் மனிதநேயமுடையவள்ளல் அதனை மறுதலித்திருப்பார்களா? சிற்றின்ப நாட்டத்தில் வள்ளல் ஈடுபட்டாலும் அவர்களின் ஜீவகாருணிய உயர்வு ஏதும் குறைந்து விடப்போவதில்லை.

### 6. இரவில் உணவு அளித்தது யார்?

ஒருமுறை காலம் கடந்து வீடு வந்தார்கள் வள்ளல். உள்ளே யரையும் எழுப்ப மனமின்றிப் பசியுடன் வெளியில் உறங்கினார்கள். வடிவுடை அம்மை உணவு தாங்கி வந்து தந்துவிட்டு திரும்புகின்றாள். சிறிது நேரத்தில் உணவு ஏற்க அழைப்பு வருகிறது. அதனைச் செய்தவர் யார்? அண்ணிதான் என்றும் தமக்கையார் என்றும் தாயார் என்றும் தனக்கோடி என்றும் கூறுபவர்கள் உண்டு. யார்தான் வள்ளலை அழைத்திருக்க முடியும்? அன்பு காட்டியதனால் அண்ணியார் என்பர். பொறுப்பு உடையவர் என்பதனால் தமக்கையார் என்பர். தாரம் என்பதால் தனகோடி எனச் சொல்ல யாரும் முன்வரவில்லை. பெற்றவர் என்பதால் தாயார் என எண்ணுபவரும் உண்டு.

தாயார் கைம்பெண். தாரம் வள்ளலின் மனைவி. ஆதலின் அந்த இரு வடிவிலும் வடிவுடை அம்மன் வர முடியாது. அண்ணன் மனைவி அண்ணியார் உணவு அளித்தார் என்றால் உலகம் பலவிதமாக அர்த்தம் பண்ணலாம். ஆதலின் தமக்கையார் வடிவிலேயே அம்மை அமுதம் அளித்திட்டாள் என்று கூறுவதே சரி.

### 7. திருநீறு அணிதல் சரியா?:

வள்ளலார் திருநீறு பூசிய காலமும் பூசாத காலமும் உண்டு. அவர்களின் தேகமோ ஒளி வடிவாயிற்று: ஒலிவடிவாயிற்று, வெளிவடிவாயிற்று. அந்த நிலையில் திருநீறுபூசமுடியாமல் போயிற்று. அப்படியே பூசினால் நிற்குமா? ஆக வள்ளலின் தேக மாற்றத்திற்குப்பின் நிகழ்ந்தவைகளை மனமே மாறாத குணமே மாறாத, சுபாவமே மாறாத நாம் விபூதி தேவையில்லை என்று பேசித் திரிவது அறியாத்தனமே.

அத்துடன் திருநீறு பூசாது விட்ட சன்மார்க்கிகளைப் பார்த்து எத்தனை பிற மதத்தினர் சன்மார்க்கத்தில் சேர்ந்துள்ளனர்? எத்தனை பிற மதத்தினர் மாமிசம் மறுத்துள்ளனர்? எத்தனை பிற மதத்தினர் ஒளிவழிபாட்டை ஏற்றுள்ளனர். ஒன்றுமில்லை அப்படி இல்லாமல் அலட்டிக்கொள்வது ஏன்?

வள்ளல் மற்றவர்க்குத் திருநீறு தந்தார். சான்றாக சிதம்பரம் தரிசன தலப் பயணம். அப்போது சுந்தர சுவாமிகளுக்கு ஐயா திருநீறு அளிக்கவில்லை என்பதனை வீறுடன் எடுத்துச் சொல்லி வருகின்றனர்.

கோடகநல்லூர் சுந்தரசுவாமி வஸ்த்து நிச்சயவாதத்தை வள்ளலுடன் பேசிப் பின் தோற்றுப்போனார். சற்குருவான வள்ளலிடம் திருநீறு கேட்டும் வள்ளல் திருநீறு தரமறுத்தார்கள். ஏன்? சுந்தரசுவாமிகள் பிராமணர். வள்ளல் சூத்திரர். சுந்தர சுவாமிகள் வயதில் பெரியவர். வள்ளல் வயதில் சிறியவர். சுந்தர சுவாமிகள் கடும்பிரம்மச்சாரி. வள்ளல் கிரகஸ்த்தம் ஏற்றவர். சுந்தர சுவாமிகள் பீடாதிபதி. வள்ளல் தெய்வபக்தர். இந்த தாரதம்யத்தால்தான் வள்ளல் திருநீறு தரவில்லை.

அத்துடன் வள்ளல் சாலைக்கு வந்தபின்பு புதுவை சாது ஒருவர்க்கு மருத்துவ ஆலோசனைக் கடிதமும் அத்துடன் விபூதிப் பிரசாதம் அனுப்பி வைத்துள்ளார்கள்.

அத்துடன் வள்ளல் சாலைக்கு வந்தபின்பு புதுவை சாது ஒருவர்க்கு மருத்துவ ஆலோசனைக் கடிதமும் அத்துடன் விபூதிப் பிரசாதம் அனுப்பி வைத்துள்ளார்கள்.

## 8. தண்ணீர் விளக்கு எரித்தது என்பது பொருந்துமா?

தண்ணீர் விளக்கு எரிந்தது என வள்ளலும் மதுரை ஆதினகர்த்தரும் காரணப்பட்டாரும் தெரிவித்துப் பாடியுள்ளார்கள். தண்ணீர் விளக்கு எரிதல் வள்ளலின் வாழ்வில் திருஒற்றியூர் ஆலயத்திலேயே நடந்துள்ளது. ஆனால் கருங்குழியில் நடந்தது ஒரு குடும்பஸ்த்தர் வீட்டில். அது உலக மக்களுக்குப் புதுமையானது. நவீன விவேகிகள் நம்ப முடியாதது.

கருங்குழியில் இல்லத்து முத்தாலம்மை விசேஷம் ஒன்றுக்கு வெளியூர் செல்கின்றார். இரவில் அங்கேயே தங்க வேண்டும். அதனால் பழகுவதற்காக வைத்திருந்த ஒரு புதிய கலயத்தில் தண்ணீர் ஊற்றி வைத்தார். பழைய கலயம் வாய் விட்டிருந்ததால் எண்ணெய் நிரப்பி வைக்க மறந்து சென்று விட்டார். இரவில் தெய்வப் பாடல்கள் எழுதும் இயல்புடைய வள்ளல் பெருமான் புதிய கலயத்தில் இருப்பது எண்ணெய்யே வள்ளல் பெருமான் புதிய கலயத்தில் இருப்பது எண்ணெய்யே என ஊற்றிட இரவு முழுவதும் அது எரியும்படிச் செய்தார் இறைவர். இதுவே வள்ளலுக்கும் முத்தாலம்மைக்கும் மற்றவர்க்கும் அதிசயமாயிற்று. அதனையே வள்ளல் சென்னை நகர் நண்பர்களுக்குத் தெரிவித்தார்கள். மற்றபடிக் காலத்தையும் காகிதத்தையும் வீணடிக்காமல் இருந்தால் சரிதான்.

## 9. உருவ வழிபாடு செய்யலாமா?

1860-தை மாதம்-5ஆம் நாள். கடலூர் பெண்ணையாற்றில் திருவிழா. எல்லாத் தெய்வங்களும் எழுந்தருளியுள்ளன. சுற்றுப்புறமுள்ள மக்கள் பெருவாரியாக வந்திருந்தனர். நீராடி வழிபட்டனர். அவர்களிடம் உருவ வழிபாடு செய்ய வேண்டாம் என ஆரிய சமாஜத்தாரும்-பிரம்ம சமாஜத்தாரும் பிரசங்கம் செய்தனர்.

மக்களுக்கு மனம் குழம்பியது. கூடலூரில் இருந்த வள்ளலைக் கண்டனர். தம் சந்தேகத்தைத் தெரிவித்து முடிவு கேட்டனர். வள்ளல் உண்ணாமுலை செட்டிச் சாவடி என்னும் இடத்திற்கு வந்தார்கள். சமாஜத்தாரைச் சந்தித்தார்கள்.

வாக்கிற்கும் மனதிற்கும் எட்டாத இறைவனை எண்ணி வழிபடவேண்டும் என்றனர் சமாஜத்தார்.

பேசும் வார்த்தைகளுக்கும் எண்ணும் மனதிற்கும் எட்டாதவர் இறைவர் என்றால் எண்ணி வழிபடுவது எந்தக் கருவி எனக் கேட்டார்கள். எண்ணுவது மனம் என்றார்கள். முன்பே மனதிற்கு எட்டாதவர் கடவுள் என்று நீங்களே கூறினீர்கள் அப்படி இருக்க மனதால் நினைத்து வழிபாடுவது என்பது எப்படிச் சரியாகும்?

வானத்தைக் காலால் அளக்கலாம் காற்றைக் கையால் பிடிக்கலாம் என்பது போல இருக்கிறதே உங்கள் செய்தி என்றார்கள் வள்ளல். மேற்கொண்டு சரிவர பதில் தரமுடியாமல் தாறுமாறாகப் பேசினர் சாமஜத்தவர். முடிவு ஏற்படவில்லை.

அப்போது வள்ளல் சொன்னார்கள். மனம் மாயையின் அம்சம். மாயையால் ஆன பொருளால் மயாதீதமான கடவுளை வழிபடவும் முடியாது; காணவும் முடியாது என்றார்கள்.

பின் எதனால் வழிபட வேண்டும் எனக் கேட்டார்கள் சமாஜத்தவர்கள். ஆன்மஞானம் பெற்று, பின் வழிபட்டால் உருவம் தேவையில்லை. அதனைப் பெறாதவரை தகுதிக்கு ஏற்ப உருவ வழிபாடு செய்ய வேண்டும் என்றார்கள் வள்ளல். இன்றோ ஆன்மஞானம் சிறிதும் பெறாதவர்களும் மன அடக்கம் பழகாதவர்களும் உருவ வழிபாடு வேண்டாம் என்பது படி ஏறாமல் மாடிக்குப் போவோம் என்னும் கட்சியைச் சார்ந்தவர்கள். அவர்கள் பேச்சு வெறும் வாய்ப் பேச்சே. ஒளி வழிபாடு உருவ வழிபாடு தான் எனநம் பெருமான் சொல்லியிருப்பது கூட அவர்களுக்குத் தெரியாது. அதைவிட்டு விட்டு உளறினால் தானும் தேறமுடியாது. பிறரையும் தேற்றமுடியாது.

## 10. ஐயர் அவசியமா?:

சத்திய தருமச்சாலை உபகாரத்தின் மூலம் இம்மைப் பயன்கள், மறுமைப் பயன்கள் பேரின்பப் பயன்களை வள்ளல் பெற்றார்கள். அவ்வாறே அனைவரும் பெறவேண்டும் என்னும் அவாவுடன் சாலையைத் தொடங்கி வைத்தார்கள். அதன்மூலம் பசியாற்றல், கொலை தவிர்த்தல், மாமிசம் தவிர்த்தல் என முக்கிய பணிகளை வள்ளல் நமக்கு உபதேசித்துள்ளார்கள்.

சத்தியஞான சபை முலம் வழிபாடு செய்தல், எண்ணியது அடைதல், இளமையாக விளங்குதல், இறவாது போதல், இறந்தார் எழுதல் முதலியன பெறும்படி உண்டாக்கினார்கள்.

சாலை சபை இரண்டுமே இறைவன் கட்டளைப்படி தான் வள்ளல் உண்டாக்கினார்கள்.

சாலைத் தொடக்கத்தின் போது ஜீவகாருணியத் திருநூலை சிதம்பரம் வேங்கிடசுப்பு தீட்சிதரைக் கொண்டு ஆராதனை செய்து படிக்கச் செய்தார்கள்.

அவ்வாறுதான் சத்தியஞானசைன்பத் தொடக்கத்தையும் முறைகளையும் வள்ளல் மேற்கொள்ளும்படிச் செய்திருப்பார்கள் என யூகிக்கலாம்.

அத்துடன் பூர்வஞான தில்லைச் சிதம்பரத்திற்கும் உத்தரஞான சிதம்பரத்திற்கும் தொடர்பு உண்டு என்பதனை உறுதிபடுத்தவே அங்ஙனம் செய்தருளினார்கள்.

## 11. இறந்தவர் எழுதல் சாத்தியமா?

வள்ளற் பெருமானைக் குருவாகக் கொண்டவர் கடலூர் தேவநாயகம் பிள்ளை. ஐயாசாமி அவரது மகன். ஒருநாள் கடும் காய்ச்சலால் உணர்வு இழந்தான். செய்வது அறியாது ஸ்தம்பித்துப் போனார் தேவநாயகம். வள்ளல் இருந்தால் மகனுக்கு வாழ்வு கிடைத்திருக்குமே என வாடினார். உள்ளம் உருகி நைந்தார். அது நள்ளிரவு நேரம். கதவு தட்டப்பட்டது. திறந்துபார்க்க கதவினருகே வள்ளல் நின்றார்கள். அதைக் கண்டுக்கொண்ட தேவநாயகம் காலில் விழுந்தார். அஞ்சவேண்டாம் என வள்ளல் சொல்லியபடியே பையனை நோக்கிச் சென்றார்கள். திருநீறு அணிவித்தார்கள். அவ்வளவே பையனுக்கு உயிர் திரும்பியது. உணர்வு திரும்பியது. உடன் நம்பெருமான் புறப்பட்டார்கள். 3,4 நாட்களில் பையன் பூரண் குணம் பெற்றான். நன்றி தெரிவிக்க பையனுடன் வண்டியில் வடலூர் வந்தார் தேவநாயகம். சாலை அருகே வண்டியை விட்டு இருவரும் இறங்கினர். அதற்குள் பெருமான் தேவநாயகத்திடம் அணுகினார்கள். அன்று நடந்தது திருவருட்செயல்; ஒருவர்க்கும் தெரிவிக்க வேண்டாம் என்றார்கள். வள்ளல் கடலூர் சென்ற அதே நேரத்தில் வடலூரிலும் பிரசங்கம் செய்துள்ளார்கள். இதனைக் கூர்ந்து உணராமல் ஏதாவது கூறி வந்தால் விளையப் போவது என்ன?

## 12. விஷ உயிர்களைக் கொல்லலாமா?

சன்மார்க்கப் பெரியவர்களில் சிலர்-விஷ ஐந்துக்கள், பயிர்ப்பூச்சிகள். மற்றும் ஈ எறும்புகள் முதலியவற்றை அழிப்பது கொலையாகாது எனக் கூறியும் எழுதியும் வருகின்றனர்.

**எவ்வுயிரும் கொல்லாதாருக்கு இன்பம் தருவது எது?**
**எவ்வுயிரும் தம்உயிர் போல் எண்ணி உள்ளே?**
**ஒத்துரிமை உடையவராய் உவக்கின்றார் யாவர்?**
**உயிருள் யாம் எம்முள் உயிர்.**

என்பன போன்ற வள்ளலின் மெய்மொழிகளுக்கு என்ன பதில் வைத்திருக்கின்றார்களோ? எந்தப் பதிலாய் இருந்தாலும் உயிர்களை அபேஸ் பண்ணக்கூடாது. அதற்கு உடன்படவும் கூடாது. ஆதரவாய் பேசுவதும் கூடாது.

## 13. கஞ்சிகூழ் போதுமே! சோறு போட்டு என்ன பயன்?

சில ஞானவான்கள் வெறும் சோறு போட்டுவிட்டால் போதுமா? கல்வி, தொழில், மருத்துவம், கலை, பயிற்சி தருதல் வேண்டாமா? தவம் யோகம் ஞானம் பழக வேண்டாமா என்று கேட்டபடி உள்ளனர்.

யாவர்க்குமாம் உண்ணும்போது ஒருகைப்பிடி என்னும் திருமூலர் வாக்கிற்கும்.

**"தருதானம் உணவு, எனச் சாற்றிய பதியே"**

என்னும் வள்ளல் திருவாக்கிற்கும் என்ன மறுமொழி வைத்திருக்கின்றார்களோ தெரியவில்லை.

**"சோறு என்பது மோட்ச வீடு என்றும்**
**சோற்றினது சொரூப ரூப சுபாவங்கள்**
**இறைவனது...சொரூப ரூப சுபாவங்களாகும்"**

என்னும் திருவருட்பா ஜீவகாருணிய வரிகளுக்கும் என்ன பதில் வைத்திருக்கிறார்களோ? தருமம் செய்து கரைகண்டு விட்டவர்கள் போல் தாறுமாறாய் இவர்கள் பேசுவது எதற்கு?

சத்திய தருமச்சாலை தொடக்க விழாவில் கஞ்சி, கூழ் கொடுத்தல் பற்றிய செய்திகள் புலப்படவில்லை.

**பசியோடே வந்தாரைப் பார்க்கவும் நேரீர்**
**பழங்கஞ்சியாயினும் வழங்கவும் நினையீர்**

என்று வள்ளல் சொல்வது ஏழை எளியவர்க்கான திருவார்த்தைகளே.

**கஞ்சி ஆதிகளைக் கனவிலும் கருதேன்**
**புன்செய்க் களி உண்ணும் மனையில் காய்ச்சுப்பால்**
**கேட்டு உண்ட கடையேன்**

என்பன போன்ற பெருமான் கூறிய மெய்மொழிகள் அந்த மகாப் பெரியவர்களைக் குறித்தே ஆகும். அப்படிப்பட்ட நமக்கு நான்கு நாளைக்கு உப்பில்லாக் கஞ்சி ஊற்றினால் எல்லாம் சரியாகிப் போகும்.

## 14. சன்மார்க்க ஆகாரம் வழங்கினால் என்ன?

சன்மார்க்க அன்பர்கள் தன்னைப் போல் ஏழை எளிய பொதுமக்களை எண்ணி உப்பு, புளி, மிளகாய் இல்லாத ஆகாரத்தை வழங்கி உண்டு வருவது நல்லது என்பர்.

எத்தனை நாளைக்கு இந்தப் பிதற்றல் வரும்? வாய் சப் என்று போய்விட்டதே என்று வருந்திய மேட்டுக்குப்பம் வந்த மக்களுக்குப் புளிச்சோறு

கிளறி தரச் சொன்னார்களாம் வள்ளல். அதனால் தன்னைப் போல் எளியவர்களையும் எண்ணிப் பேசிவருவதால் ஆகப் போவது ஒன்றுமில்லை.

## 15. ஜீவகாருணியம் தனக்கு செய்துக் கொள்ள வேண்டாமா?

பசியாற்றல், கொலைபுலை நீக்கல் காரியங்களைச் செய்பவர்கள் தன் ஆத்மா கடைதேற என்ன செய்கிறார்கள்? பிறருக்கு உபசரிப்பதே முக்கியமாகச் செய்தால் நம் ஜீவனுக்கு உபகாரம் செய்து கொள்வது எப்போது? ஆதலின் தவயோகம். தியானத்தில் ஈடுபட்டால் தனக்கு உதவி செய்வது ஆகும். எனச் சில சன்மார்க்க அன்பர்கள் போதித்து வருகிறார்கள்.

ஏழைகள் பசியாற்றலுக்கு எடுத்துக்கொள்ளும் முன் முயற்சிகள் கூட ஜீவகாருணியமே! சரியை கிரியைப் பயனையும் மக்கள் பசி நீக்குவதால் அடைய முடியும். யோகமும் அடையமுடியும். ஞானமும் அடையமுடியும். யோகமும் அடையமுடியும். ஞானமும் அடையமுடியும் கடவுளையும் தரிசிக்கவும் முடியும். மோட்சமும் அடையமுடியும் தானே கடவுளும் ஆகமுடியும் என்று வள்ளல் தானே கூறுகிறார்கள். அவர்களின் திருவார்த்தைகளுக்கும் திருவருட் பாடல்களுக்கும் மேம்பட்ட சான்றுகள் எங்கே இருக்கின்றன? ஜீவகாருணியத்திற்கு மேம்பட்ட புண்ணியம் என்ன இருக்கிறது? பசி என்பதே நாம் மேலோங்கக் கிடைத்த உபகாரக் கருவி. பசியாற்றுவிப்பது ஒன்றே கடவுள் உளத்தில் கிளர்ச்சியை, மகிழ்ச்சியை உண்டாக்க வல்லது. அத்துடன் ஜீவான்மாவும் பரமான்மாவும் ஒன்றுபடச் செய்யும் ஒரே செயல் ஜீவகாருணியமே என்பதெல்லாம் மேற்கூறிய புண்ணிவான்களுக்குத் தெரியாதா? தெரிந்தும் தெரியாதுபோல் பேசுவதே இன்றைய நாகரிகம்.

## 16. பட்டினி இல்லையே: பசியாற்றதல் ஏன்?

பாரத தானியக் கிடங்குகள் நிரம்பி வழிகின்றன. 295 நாடுகளுக்கு பாரத நாடு உணவு ஏற்றுமதி செய்கின்றன. யாரும் பிச்சை கேட்டது இல்லை. காசு பிச்சைதான் கேட்கின்றனர். கஞ்சி கூழ் கிடைத்தால் மறுக்கின்றனர். உணவு தந்தால் கூட விரும்பி சாப்பிடுவதில்லை. தேவையில்லாமல் வீசி எறிந்து விட்டுச் செல்கின்றனர். இந்த நிலையில் பசிக்குச் சோறு அளிப்பதால் பயன் என்ன? என்று நினைக்கின்றனர் பலர்.

மழை ˙ எல்லா இடத்திலுமா சீராக நேராகவாப் பெய்கிறது? ஓரிடத்தில் வெள்ளம் ஓரிடத்தில் வறட்சி! நியாயந்தான். ஆனால் எல்லா இடங்களிலும் செழிப்பு இல்லை. உணவுக்கு இக்கட்டும் ஏக்கமும் உள்ளது. அந்த இடத்தில் உணவு தருவது யாரும் இல்லை. பெருமைப்பாடே தருமத்தில் மேலோங்கி நிற்கிறது. ஆனால் எங்கு கருணை இயற்கையில் உள்ளதோ அங்கு உணவும் உணர்வும் பயன்தராமல் போகாது. அறியாமல் பேசினால் கன்னித்தீவு தொடர் கதைதான்.

## 17. சோம்பேறிகளை வளர்ப்பது ஆகாதா?:

சோறு அளித்துச் சோம்பேறிகளை வளர்க்கின்றோம். உணவு தரும் கேந்திரத்தில் குடும்பமே நடத்துகிறார்கள். வருகின்ற காசு பணங்களை தம்

அடித்தும் தண்ணீர் அடித்தும் துருப்பு ஆடியும் செலவிடுகின்றனர். அப்படிப்பட்டவர்களுக்கு எதற்குச் சோறு அளிக்க வேண்டும்?

பசி இருந்தால் சோறு அளிக்க வேண்டும். பசி நீக்க முன்வருபவர் இவர் தகுதியுடையவர் இவர் தகுதியற்றவர் என்னும் வேற்றுமைகளைக் காணுதல் அனாவசியம். யாவரையும் பொதுவில் கருதி பசி போக்குதல் செய்ய வேண்டும். சோறுதான் சுவர்க்கம்.

பசி நீக்கியபின் அவர்களை நல்வழிப்படுத்த நன்முயற்சியில் ஈடுபடுத்த முன்வருவது நல்லது. அவ்வாறு இல்லாமல் பசியாற்றுவது ஒன்றே நம் வேலை என்று கருதுதல் போதாது. மற்றபடி நமக்கு என்ன என்று நடப்பதும் தரும நிறைவு ஆகாது.

அப்படிச் செய்யாவிட்டால் தருமம் மிஷின் ஒர்க்காகிப் போய்விடும். அதனால் தருமம் பயனில்லை என்று விமர்சனம் செய்தால் அது தள்ளுபடிதான்.

## 18. கல்பட்டு ஐயா திருக்கோயில் இருக்கலாமா?

கல்பட்டு ஐயாவை வழிபடுவது சன்மார்க்கத்திற்குப் புறம்பானது. அவர் சமாதி ஆனவர். சமாதிகளை வழிபடுவது சன்மார்க்கம் அல்ல. சாகாநிலையே சன்மார்க்கம். தனக்கு அதிகாரம் இருந்தால் சமாதியை அப்புறப்படுத்துவேன் என்பவர்கள் இருக்கிறார்கள்.

எல்லா அபிப்பிராயங்களையும் ஒதுக்கி விடுவோம். கல்பட்டு ஐயா யார்? அவர் ஒரு தவயோகி. அவரை நம்பெருமானே தேடிச் சென்று சீடராக்கிக் கொண்டு வந்தார்கள். வந்தபின்பு சாலையில் கூழ் வார்க்கும் பணியைக் கவனிக்கும்படிக் கட்டளை இட்டார்கள்.

தகுந்த செய்திகள் வெளிப்படுத்தும் போது கல்பட்டு ஐயாவை முன்னிலைப் படுத்தி வெளியிட்டார்கள். கல்பட்டு ஐயாவுக்கு வள்ளலே உடல் பொருள் உயிரை அர்ப்பணிக்க விண்ணப்பம் ஒன்றினை வரைந்தார்கள். அதில் கல்பட்டு ஐயாவின் கையொப்பம் பெற்றுத்தன் கோப்பில் வைத்துக் கொண்டார்கள்.

மேலும் பெருமானின் சித்திக்குப்பின் சுமார் 25 ஆண்டுகள் தருமச் சாலைப் பணிகளைக் கவனித்து 3 சீடர்களைக் கொண்டு நடத்தி வந்தார்கள்.

அத்தகைய தவச்சீலருக்கு நாம் நன்றி சொல்ல ஓர் அடையாள இடம் இருக்கக் கூடாதா? அது துன்மார்க்கமா? அப்படி எண்ணுவோமானால் அது முறையற்ற எண்ணமே!

## 19. பிள்ளையார் சுழியும் திருச்சிற்றம்பலமும் போடலாமா?

ஒன்றை எழுதத் தொடங்கு முன்பு பிள்ளையார் சுழி திருச்சிற்றம்பலம் என எழுதி நம்பெருமான் தொடங்கியுள்ளார்கள். திருச்சிற்றம்பலம் கூறாமல் தொடங்கும் தொடங்கிய பாட்டை பழிக்கின்றேன். மற்றும் பாட மறந்து விடுவேன்

என்கின்றார்கள்-பழித்தேன்; சிற்றம்பலம் என்னாப் பாட்டை மறந்தேன் - தி. 6.1269 என்பதன் மூலம் அதைத் தெரிவிக்கின்றார்கள்.

அத்துடன் அருட்பெருஞ்ஜோதி அகவல் நம்பெருமான் தெய்வத் திருக்கரத்தால் வரைந்தபோதும் உ திருச்சிற்றம்பலம்- எனத் தொடங்கிச் ‘திருச்சிற்றம்பலம்’ என்றே முடித்துள்ளார்கள்.

எவ்வழி அரசனோ அவ்வழி குடிமக்கள் என்னும் மரபுக்கு மீறிப் பேசும் - சுத்த-சுத்த-சுத்த-சுத்த-சன்மார்க்கிகளாகிய நாம் சுற்றி அலையவேண்டி வரும்.

**20. சிவகாம வல்லி ஞானானாந்தவல்லி யார்?**

சிவகாமவல்லி மணவாளா வந்தருள்க! ஆனந்தவல்லி சிவகாம சுந்தரிக்கு இனிய துணையே!” என ஆறாம் திருமுறை பொன்னடிகளால் அருட்பெருஞ்ஜோதி ஆண்டவர் அம்மை இருவருடன் அருள் நடம் இடுகின்றார் எனத் தெரிவிக்கின்றார்கள் வள்ளல்.

ஆறாம் திருமுறை சிற்சக்தி துதியாகிய கொடிப்பாட்டு. அந்த அருட்பெருஞ்ஜோதியர் வலம் சேர்ந்த ஆனந்தவல்லி அம்மையையும் இடம் சேர்ந்த சிவகாமவல்லியையும் போற்றிப் புகழ்கின்ற தோத்திரமாக அமைந்துள்ளது.

**மாண்டாரை எழுப்புகின்ற மருந்தான தெய்வம்**
**மாணிக்க வல்லியை ஓர் வலத்தில் வைத்த தெய்வம்**

என்றும் நம் பெருமான் அருளியுள்ளதால் வடலூராம் உத்தரஞான சித்திபுரச் செல்வருக்கு வலமும் இடமுமாக இரண்டு அம்மையர் விளங்குகின்றனர்.

இது பற்றி ஐயப்பாடு உடையவர் ஏழாம் திருமுறை இயற்றலாம்.

21. கற்பூரம் ஏற்றலாமா?

ஒற்றியூரில் தெய்வத்திரு ஏற்றி வழிபட கற்பூரம் (பளிதம்) இல்லையே என்று ஏங்கியுள்ளார்கள் நம்பெருமான்.

**“பளித்தீபசு”** என நாமாவளியின் மூலம் “கற்பூரம் தீபமே” என இறைவனைத் துதிக்கின்றார்கள் வள்ளல்.

எல்லாம் வல்லவனுக்கு கண்திருஷ்ட்டி கழிக்க கற்பூரம் எடுத்துவா தோழி. அப்படி கற்பூரம் ஏற்றி வழிபட்டால் எவ்வுலகிற்கும் எவ்வுயிருக்கும் அது இன்பம் உண்டாக்கிடும் நற்செயல் என்று அருள்விளக்க மாலையில் தெரிவிக்கின்றார்கள் வள்ளல்.

கற்பூரம் மணக்கின்றது என் திருமேனி முழுவதும் என்றும் அது கடவுள் திருமேனியுடன் கலந்ததனால் உண்டாகிய புனித மணம் என்றும் கூறுகின்றார்கள்.

அப்படி எல்லாம் இருக்க சன்மார்க்க நிலையங்களின் வழிபாட்டில் இப்போது நெய் விளக்கு மூலம் ஆராதனை காட்டப்படுகிறது. இது தெய்வச் சமூகத்தின் வணக்கத்தினை மடைமாற்றுவது போலாகிவிடுகிறது.

சுத்த கற்பூரவில்லைகள் மூலம் மனம் நெகிழ வழிபட்டு ஆராதனை செய்வதை ஆண்டவர் ஏற்பார்.

ஆனால் இந்த சன்மார்க்க மதியூகிகள் “ஆய்” “ஊய்” என ஆரவரிக்கின்றனர். வம்பு வழக்கும் பேசுகின்றனர்.

சுத்த கற்பூரத்தைத் தெய்வ நிலையமே “சிறுதொழில்” ஏற்பாட்டில் தயாரித்து தரமுடியும்.

அப்படிச் செய்தால் ஒருநற்காரியத்திற்கு உடந்தை ஆனவர்கள் ஆவோம்.

## 22. நைவேத்தியம் படைக்கலாமா?

கல்பட்டு ஐயா திருக்கோயில்-சத்திய தருமச்சாலை-சத்திய ஞான சபையில் அன்றாடம் அன்ன நைவேத்தியம் படைத்து வழிபாடு நடக்கின்றது. சோறு என்பது கடவுளே.

தினமும் நாம் கண்டு உண்டு வரும் சோறு கடவுளின் ஏகதேச உருவமாம். கடவுளின் ஏகதேச சொருபமாம். கடவுளின் ஏகதேச சுபாவமாம். இது வள்ளல் மெய்மொழி. ஆதலின் சோறு படைத்து வழிபடுவது என்பது கடவுளுக்குச் சம்மதமே. அதை அறியாமல் நாம் ஏதாவது பேசினால் அது பகலை இரவு என்று சொன்ன கதையாகிவிடும்.

## 23. பூப்பந்தல் போடலாமா?

ஐயா திருமேனிக்கோ திருச் சமூகத்திற்கோ மலர்ப்பந்தல் வேண்டாம். மாலைகளும் வேண்டாம். என்று திருவாய் மலர்ந்தருளும் தெய்வ மாந்தர் சன்மார்க்கத்தில் மேலோங்கி நிற்கின்றனர்.

மன்மாலைமாலையாக வந்து சூழ்கின்றனர். சினைப்பள்ளித் (காலையில் அளிக்கும் மாலை) தாமங்கள் அடியார் கொணர்ந்தனர். மாளிகையை மலராலும் மணியாலும் பொன்னாலும் மங்கலங்கள் நிரம்ப அலங்கரிப்பாய் என்று நம் பெருமான் கூறியுள்ளார்களே! அது ஏன்?

அதன்படி பக்தியும் அன்பும் கொண்டு பூந்தோட்டத்தில் மலர் எடுத்து, அது தொடுக்கப்பட்டு, அதனை வள்ளலின் திருவடுக்கும் திருமேனிக்கும் திருமுடிக்கும் அணிவது சரியானதே என்பது தெரியவருகின்றது.

ஆதலின் துலுக்கச் சாமந்தி முதலிய ஒதுக்கப்பட்ட மலர்களைக் கொண்டு மாலை தொடுக்காமல் முல்லை-மல்லிகை-குவளை-தாமரை வில்வம் முதலிய மலர்களைக் கொண்டு மாலை தொடுத்துச் சூட்டலாம். ஆண்டாள் மாலை சூடியே

அரங்க மணாளனை அடைந்துவிட்டாள். அப்படி இருக்க நாம் ஏன் மாலை தொடுத்து வள்ளலை வழிபடக் கூடாது?

### 24. நன்கொடை பெறலாமா?

சன்மார்க்கத்தினர் நன்கொடை வசூல் செய்கின்றனர். அது செய்வோம் இது செய்வோம் அநேகம் செய்வோம் என்று நன்கொடை வசூர் செய்கின்றனர்.

அவ்வசூலில் வள்ளலின் கட்டளைப்படி அரும்பசி போக்கலுக்கு அற்ப பணமே செலவு செய்கின்றனர். நூறு மடங்கில் ஆறு மடங்கு அன்னதானம் செய்து வருகின்றார். மற்றவை ஆரவார விழா நடைமுறைக்கும் சேமிப்புக்கும் செல்கிறது. இப்படியே நாம் செய்தால் எதிர்காலம் கேள்விக்குறியாகலாம்.

### 25. தனது பங்கு எவ்வளவு?

சன்மார்க்க வளர்ச்சிக்கு செல்வந்தர்கள் வியாபாரிகள். உத்தியோகஸ்த்தர்கள் மற்றவர்களிடம் பணம் வசூலிக்கப்படுகிறது. அங்கத்தினர்களிடம் வசூலிக்கப்படுகிறது. பொறுப்பில் இருக்கும் தலைவர்-செயலாளர்-பொருளாளர்- அமைப்பாளர் முதலியவர்கள் தன் பங்குக்கும் என்ன வைக்கிறார்கள்? அப்படியே வைத்தாலும் அது அவர்களது சொந்தப் பணமாக இருக்குமா?

பெரியோர்கள் என்ற பெயர்பெற்றவர்களுக்கும் சுவாமிகளுக்குமே இந்தப் பணவசூல் வேலை.

எப்படி ஆனாலும் காசு பணம் செல்வம் பொருள் யாவையும் இறைவனது கருணைக் கொடைகள். அதற்கு நாம் தர்மகர்த்தாதான். மற்றபடி உரிமை ஏதும் இல்லை. அப்பணத்தின் மீது உரிமை கொண்டாடினால் இயற்கை நமது உரிமையை மாற்றிவிடுவதைத் தடுக்க முடியாது.

### 26. மகா மந்திரம் எப்படி எழுத வேண்டும்?:

எல்லாச் சன்மார்க்கிகளுக்கும் ஏற்ற பெரு மந்திரத்தை நம் பெருமான் தெரிவித்திட்டார்கள். அது மிகப் பலராலும் போற்றப் பெற்று வருகின்றது.

ஒரு சிலர் மட்டும் ஒன்றன் கீழ் ஒன்றாகவும் அருட்பெருஞ் ஜோதி அருட்பெருஞ் ஜோதி தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்ஜோதி எனவும் அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங் கருணை என இரு தொடராகவும் அருட்பெருஞ்ஜோதி என ஒரே தொடராகவும் வழங்கி வருகின்றோம். அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி எனத் தனி வழியாகவும் எழுதி வருகின்றோம்.

வினோத சன்மார்க்கர்களாகிய நாம் அருட்பெருஞ்ஜோதியருட்பெருஞ் ஜோதித்தனிப்பெருங்கருணையருட்பெருஞஜோதி என ஓரே மூச்சில் சந்தி சேர்த்து எழுதியும் வருகின்றோம். ஆரிய உச்சரிப்பு போலச் சொல்லி ஆவியைச் செலவு செய்கின்றோம்.

எல்லாம் வல்ல இறைவர்க்கு உள்ளக் கிளர்ச்சியை உண்டாக்குவது ஒலிப்பும் அல்ல எழுத்தும் அல்ல. அவர் விரும்புவது ஜீவகாருண்ய உணர்வு ஒன்றையே கனிவு. அதுவே அவருக்குப் பரமதிருப்தியை உண்டாக்குவது.

அதைவிட்டு விட்டு ஆய் ஊய் என அலறாமல் இருப்போம்.

## 27. கடைவிரித்தேன் கொள்வாரில்லை என்பது சரியா?:

கடைவிரித்தேன் கொள்வாரில்லை. கட்டிக் கொண்டேன் ஆதலின் சன்மார்க்கம் வளர்ப்போம் என்றும் வள்ளல் வழி செல்வோம் என்றும் எதற்குத் தடுமாறுகிறீர்கள் என்று அறிவு ஜீவிகள் கேட்டபடி உள்ளனர். வள்ளல் தெரிவித்ததை முழுமையாக கேட்டு உணர யாரும் முன்வரவில்லை என்ன செய்வது?

வள்ளல் தெரிவித்த செவி வழிச் செய்திகள் இவையே:

1. கடைவிரித்தோம் கொள்வாரில்லை.
2. கட்டிக் கொண்டோம்
3. ஆனால் அச்சில் வார்ப்போம்
4. ஆகாவிட்டால் மிடாவில் வார்ப்போம்
5. கைவிடோம் கைவிடோம் கைவிடோம் கைவிடோம்
6. அஞ்சவேண்டாம்.
7. நம்பிக்கையோடு இருங்கள். என்றே கடைவிரித்தோம் என்பதைத் தொடர்ந்து மேலும் உபதேசித்துள்ளார்கள். அதனால் வள்ளல் வழி பயனற்றது என முடிவு எடுப்போம் என்றால் மற்றவழிகள் எல்லாம் பேர் வழிகள்தான்.

## 28. ஒப்பிடுதல் சரியா? :

வள்ளலை முருக வள்ளல், ஞான சம்மந்த வள்ளல், அருட்ஜோதி வள்ளல் ஆகியவர்களுடன் ஒப்பிடலாம். அப்படி இல்லாமல் சித்தர்கள் முக்தர்கள் தேவர்கள் மூவர்கள் புலவர்கள் அறிஞர்கள். பெரியோர்கள் மற்றும் மகான்கள், ஞானிகள் யாவருடனும் ஒப்பிடக்கூடிய தகுதிக்கு மேம்பட்டு ஓங்கி நிற்பவர்கள் வள்ளல்.

எல்லாம் வல்ல இறைவனே வள்ளலின் அழைப்புக்கு காத்து நிற்கின்றனராம். அழைத்தால் உடன் விரும்பியே வந்து சேர்ந்தனராம். அத்துடன் வள்ளலை விரும்பி நேர்காண வந்தனராம். மேலும் மனதில் வேறு எண்ணற்க என்றும் வள்ளலைத் தயவுடன் கேட்டுக்கொண்டனராம்.

பேராலும் அறிவாலும் பெரியர் எனச் சிறப்பாகப் பேசுகின்றார் யாராலும் பெறல் அரியது யாது அதனைப் பெறுவித்தானாம். அதனால் எனக்கு இணை யார் என்று இயம்புவனே என்று வள்ளல் தெரிவித்துள்ளார்கள். அதன்படி வேறு எவருடனும் வள்ளலை ஒப்பிட்டுப் பேசுதல் பேரபராதம்.

## 29. எரிந்து விட்டார்கள் என்று பேசலாமா?

வள்ளலார் ஜோதியாகவில்லை. மறையவுமில்லை கற்பூரத்தில் எரித்து விட்டார்கள். காலமாகிவிட்டார்கள் என நெஞ்சைப் பிளக்கும் நீச வார்த்தைகளைப் பேசி வருகின்றனர் சிலர்.

பனிக்கட்டி ஒன்று நீராகிறது. அதுவே கொதி நீராகிறது. அதுவே ஆவியாய்ப் போகிறது. அதுவோ மறைந்து விடுகிறது, அது மீண்டும் பனிக்கட்டியாவதில்லை.

அவ்வாறே வள்ளல் பெருமானும் அசுத்த பூத மனி தேகத்திலிருந்தார்கள். அதன்பின் அசுத்தா சுத்த பூத தேகத்தில் சேர்ந்தார்கள். முடிவில் சுத்த பூத தேகத்திற்குப் பரிணாமம் பெற்றார்கள். கடவுள் போல் எங்கும் புகுந்துக் கொண்டு நம்மை இயக்கி வருகின்றார்கள்.

இது மெய்யறிவு முடிபான கருத்து ஆகும். அத்தனையும் ஜீவகாருணிய சீலத்தால் கிடைத்த வெற்றியாகும்.

அதை உணரும் வலிவற்றவர்களாகவே நாம் வாழ்ந்து வருகிறோம்.

## 30. சுத்த சன்மார்க்கம் என்பது என்ன?

சன்மார்க்கம் என்றால் என்ன? என்று சுத்த சன்மார்க்க முன்னோடிகளைக் கேட்டால் சாதி, சமயம், மதம், குலம், கோத்திரம், சடங்கு, வேடம் முதலியன பின்பற்றாமை எனக் கூறி வருகின்றனர்.

ஜீவகாருணியம் என்பது சன்மார்க்கம் என்றும் ஜீவகாருணியம் இல்லாமையே துன்மார்க்கம் என்றும் நம்பெருமான் தெரிவித்துள்ளார்கள்.

அதன்படி உத்தம ஜீவகாருணியமே சுத்த சன்மார்க்கமாகும். ஜீவகாருணியம் என்கிற ஆன்ம நெகிழ்ச்சி மனிதர்களில் தொடங்கி மரம் முதலிய ஓரறிவு உயிர்கள் வரை கசிவது, உதவுவது ஒளிர்வது.

அப்படி மனிதரையும் கடந்து மன்னுயிர்பாலும் ஜீவகாருணிய சீலம் இடைவிடாது நிற்குமானால் அதுவே சுத்த சன்மார்க்க நிலையாகும்.

அதனது சேர்க்கை ஒன்றினால் மட்டுமே நமது தேகம் நித்தியத் தன்மையை அடையும். மற்றபடி சொல்லி நாம் பூரிப்பதெல்லாம் பொய் பூரிப்பேயாகும்.

## 31. ஐந்தாம் திருமுறை ஏன் ஓத வேண்டும்?:

சுத்த சன்மார்க்கிகள் திருவருட்பா ஆறாம் திருமுறையைத்தான் ஓதுவார்கள். மற்றபடி வள்ளல் பூர்வ நிலையில் பாடியதெல்லாம் ஒதுக்கிவிடுவார்கள்.

பூர்வநிலை என்றால் அது புளியங்காய் போலத்தான். மரணமிலாப் பெருநிலை பூர்வ பூர்வத்திலும் உண்டு. பூர்வத்திலும் உண்டு. உத்தரத்திலும் உண்டு. உத்தரோத்தரத்திலும் உண்டு.

நல்லது எங்கு தென்படினும் அதனை அன்புடன் தழுவிக் கொள்ளுதல் நாம் மேலேறச் செய்யும் படி. அதை விட்டு விட்டு திருவருட்பா ஏழாம் திருமுறை ஒன்று இருப்பதானால் அதனை எண்ணிப் பழகுபவர்கள் போல் பேசும் நமது வாழ்வெல்லாம் என்ன வாழ்வு?

## 32. திருவருட்பா-பதிப்புகள் சரியா?

திருவருட்பாவைப் பலரும் வெளியிட்டு வருகின்றார்கள். சந்தி பிரித்த பாடல்களை வெளியிடலாம். அது உபகாரம் அதிகம்படிக்காதவர்களுக்கு உதவியாகும். அதை விடுத்து நமது கோணல் புத்தியால் எழுத்து, சொல் பொருள், பாடல். பதிகங்கள் திருமுறைகள் முதலியவற்றை வேண்டியபடி மாற்றிப் பதிப்பிக்கின்றோம். ஆண்டவன் எடுத்துக் கொடுக்கின்றான். ஐயா தொடுத்து அளிக்கின்றார்கள். அந்தப் பாடல்களில் அமைப்பு நிலை பிழை என்று கருதி மனம் போனவாறு கைவரிசையைக் காண்பித்து திருத்திப் பதிப்பிக்கின்றோம்.

## 33. திருமுறையில் மாற்றம் இருந்தால் என்ன?:

வள்ளற் பெருமான் கருங்குழியில் இருந்த காலத்திலேயே அவர்கள் பார்வைக்குட்பட்டு திருவருட்பா திருமுறைகள் வகுக்கப்பட்டன. அது வள்ளலின் வளர் கருணை வழிகாட்ட நடந்தது. அத்துடன் பதிப்பிக்கும்முன் வள்ளலின் திருமுன்பு சமர்ப்பித்தார்கள். வள்ளலும் கருணை கூர்ந்து பார்த்தருளினார்கள். திருமுறைகள் சரிவர தொகுக்கப்பட்டதை உணர்ந்தார்கள். அதன் பின்பே அச்சேற்ற அனுமதி அளித்தார்கள். அப்படி வள்ளல் பார்வையில் முதல் மாணவரின் தகுதிப்பாட்டினால் வெளிப்பட்டதே திருவருட்பா நான்கு திருமுறைகளும் மற்றும் ஐந்தாம் திருமுறையும் அதை விட்டு விட்டு எதையாவது எண்ணி மாற்றம் செய்வோமானால் நம் கதி நற்கதியாக நாளாகுமே!

## 34. மொட்டை அடித்திடலாமா?

சுத்த சன்மார்க்க உலகில் மொட்டை அடித்தல் பெருகிவருகின்றது. காரணம் வள்ளலே மொட்டை அடித்தவர்கள்தான் என்கின்றனர். அதற்கு ஆதாரமாக “உள்நகை தோற்றிட உரோமம் பொடித்திட” என்னும் அகவல் தொடரை எடுத்துக் காட்டுகின்றார்கள். பொடித்தல் என்பதற்கு மயிர் சிலிர்த்தல் என்பது பொருள். பேரின்பப் பெருநிலை ஆகும் போது மயிர் சிலிர்த்தல் முதலிய தேக மாற்ற உணர்வுகள் உண்டாகும். அதனையே பெருமான் எடுத்து ஓதி உவந்திட்டார்கள். அதனது அருமையும் பெருமையும் அறிந்து கொள்ள இயலாதவர்கள் “பொடித்தல்” என்பதற்கு மயிர் கொட்டி விடுதல் என்று பொருள் கொள்கின்றனர். அதனால்தான் மயிர் கொட்டுவதற்குப் பயந்து மொட்டை அடித்துக் கொள்கின்றனர் பரிதாபம். பிறரையும் மொட்டை அடிக்கச் செய்கின்றனர். இதுவோ சுத்த சன்மார்க்க அகநிலை வளர்ச்சி? இப்படி நாம் ஒன்றுகிடக்க ஒன்று செய்து கொண்டே வந்தால் அதுவே அசைக்க முடியாத சங்கற்பமாகி அலைவுபட்டுத் தடுமாறுவோம்.

## 35. மீசை வைத்திருப்பது சரியா?

சாதுக்கள் மீசை வைக்கணுமா? வள்ளலாருக்கு ஏன் மீசை? இப்படிப் பலர் எண்ணுகிறார்கள். கேட்கிறார்கள். சர்வ மங்கலத்தின் அடையாளம் மீசை. மாப்பிள்ளைக்கு அடையாளம் மீசை. ஆண்பிள்ளைக்கு அடையாளம் மீசை, அழகினுக்கு அடையாளம் மீசை, மன்னர்களின் அடையாளம் மீசை.

அருட்சக்தியைக் கைப்பிடித்த அருட்பிரகாசரின் அருள் அடையாளம் மீசை. சர்வ தேவாதி தேவர்களும் மகளிர். வள்ளல் ஒருவரே ஆடவர். அவர் இயற்றும் ஆட்சியோ அருளாட்சி அந்த அருளரசருக்கு மீசை வேண்டாமா? அதனால் மீசை வைக்க வேண்டியதாயிற்று. அதுவும் இறைவர் ஆணையின் பேரில்தான். இதை அறியாது ஏதாவது பேசுவோமானால் அறியாமைதான் வெளிப்படும்.

## 36. ஆற்காடு ஜோடு அணியலாமா?:

ஆற்காடு ஜோடு தோல் இல்லை. கேன்வாஸ். அடிப்பகுதி கரடுமுரடாக இருக்காது, மெத்தென்று இருக்கும். ஜோடின் முனை மேல்நோக்கி இருக்கும். வள்ளல் பூண்ட திருச்ஜோடோ இராமன் பாதுகையைப் போல் மேலான வீடுபேற்றை அளிக்கும் தன்மை உடையது. எந்த உயிர்களுக்கும் இம்சை தராதது. புனிதத்தின் இரக்கத்தின் அடையாளமாகிய வெண்மை நிறம் உடையது. இதை அறியாமல் உளறிக்கொண்டிருந்தால் நம்கருத்து உலாவரமுடியாமல் போகும்.

## 37. துணியா? திரையா? மாயாசத்திகளா?:

சத்திய ஞான சபையில் துணி தொங்குகிறது! அதற்கு வழிபாடு. பல நிறத்திரைகள் தொங்குகின்றன! அதற்குப் பூசை என்கிறார்கள். பாவம். நமது ஆன்மாவை மறைக்கும் மாயா சத்திகளதாம் திரைகளாக (அரூபரூபம்) மூடியுள்ளன. அதற்கு ஆராதனை. அந்தத் திரைகளை நீக்கி சுத்த ஆன்மா என்னும் கண்ணாடியில் அருட்பெருட்பெரும் ஜோதியின் சுத்த நட தரிசனம் காண்பிக்கப்படுகிறது. அதை விட்டுத் துணி மணி என நாம் பேசுவதால் ஆகப் போவது என்ன?

## 38. மாமிசம் உண்பவர்கள் சன்மார்க்கத்திற்கு வரலாமா?:

சன்மார்க்கத்திற்கு முழுவதும் மாறுபட்டது மாமிச உணவு. மாமிசம் உண்பவர்களைக் கண்டால் கண்காணா தூரத்திற்கு ஒதுங்க வேண்டும். வார்த்தை ஏதும் பேசக்கூடாது. அவரைப் பற்றி எண்ணவும் கூடாது என்பது விதி. இது மாமிசத்தை உண்பேன் என்னும் விடாப்பிடியாளருக்குதான். என்ன செய்வது முடியவில்லையே என்பவர்களுக்கும் எப்படியாவது நல்ல வழிக்கு மாமிசம் தொடாக வழிக்கு வந்து விடுவோம் என்பவகளுக்கு அல்ல. அவர்களையும் நம்மவர்கள் ஆக்குவதே சன்மார்க்க சாதனம். ஆதலின் அவர்களை எந்த விதத்திலாவது கறிமீன் உண்ணாதவர்களாக ஆக்குதல் வேண்டும்.

## 39. ஐயர் பூசை செய்யலாமா?:

சத்திய ஞான சபை சன்மார்க்கத்தின் உச்சநிலை பீடம். அங்கு ஐயர் பூசை செய்வதா? அவர் குடுமி வைத்திருப்பதா? பஞ்சகச்சம் கட்டுவதா? பூணுல் தரிப்பதா? பட்டை விடுவதா? இலிங்க பூசை செய்வதா? இப்படி ஆராய்ச்சி செய்து செய்து பார்க்கிறோம். 1867 வைகாசி 11ல் சத்திய தருமச் சாலைத் திறப்பு விழாவில் சிதம்பரம் தீட்சிதர்தான் ஆராதனை செய்தார். ஜீவகாருணிய திருநூலை மூன்று நாள் அவர்தான் வாசித்தார். இன்று சபையை நாம் எடுத்துச் செய்ய தகுதி பெற்றுள்ளோமா? அதை விட்டு விட்டு கூப்பாடு போட்டு குழப்புதல் சரியாகாது.

## 40. சங்கங்களில் பிரிவினை சரியா?

ஊர் சங்கம், ஒன்றிய சங்கம், வட்ட சங்கம், டவுன் சங்கம், மாவட்ட சங்கம், தேச சங்கம், உலக சங்கம், அகில உலக சங்கம், தலைமைச் சங்கம், இசைச் சங்கம், சமரச சங்கம், சுத்த சன்மார்க்கச் சங்கம் எனப் பல்வேறு

பிரிவினைகள் பல்வேறு கருத்துகள் பரவியுள்ளன. அது பல மரம் கண்ட தச்சர் ஒரு மரமும் வெட்ட மாட்டார் என்ற கதை போலத்தான்.

### 41. ஐயர் வசம் நிலம் இருக்கலாமா?:

வள்ளலின் வடற் பெருவெளியில் ஒரு பகுதி சத்தியஞானசபை பூசகரிடம் இருந்து அதை விற்பனை செய்துவிட்டார். தற்போது வடல்வெளியில் அது ஒரு தனி நகராக உண்டாகி சபையின் இயற்கை எழிலுக்கும் கோபுர தரிசனத்திற்கும் குறைவு உண்டாக்கியுள்ளது. இவ்வளவு தூரம் தைதா என்று ஆடுகின்ற முன்னோடிகளாகட்டும், நிர்வாகமாகட்டும் என்னதான் நடக்கும்? நடக்கட்டுமே பார்த்துக் கொள்வோம் என்று கருதுகிறார்கள். உணர்வுடையோர் அதனைத் தன் பெயரில் வாங்கி நிர்வாகம் வசம் ஒப்படைத்திருக்கலாம். நல்ல செல்வ வசதி படைத்த நிர்வாகமும் துணிந்து வாங்கிப் போட்டிருக்கலாம். இரண்டு பக்கமுமே கோட்டை விட்டு விட்டு ஐயரைக் குறை சொல்லி என்ன பயன்?

### 42. எது சன்மார்க்கத் திருப்பணி?:

பசியாற்றுதல்-பலிதடுத்தல்- கொலை நீக்குதல்- மாமிசம் நீக்குதல் வழிபாடு செய்தல், மனிதநேயம் பாராட்டுதல் உயிர்நேயம் போற்றுதல் இவையே சன்மார்க்கத் திருப்பணிகள். மற்றவை எல்லாம் தெருப்பணிகளே. இதுபற்றி சரிவர உணராமல் ஒன்று கிடக்க ஒன்று செய்வதால் உழைப்புதான் வீணாகும்.

### 43. கொடி அளவு சரியா?:

கால் முக்கால்-அரை அரை-மூன்றில் ஒன்று எனப் பொன்நிறமுடையதாகக் கொடி கட்டப்படுகின்றது. இதைப்பற்றி ஆராய்ந்து மாநாடு கூட்டி முடிவு கண்டும் சரியான ஒரு முடிவும் எல்லாரும் பின்பற்றும்படி உண்டாகவில்லை. எப்படியோ மஞ்சள் மேலும் வெள்ளை கீழுமாக கொடிகட்டி சங்கம் தொடங்கட்டும். காலம் செல்லச் செல்ல 1/4 முக்கால் என்று தெரியவரட்டும். அதுவரை பொறுத்திருப்பதே அழகு.

### 44. தீபத் திருநாள் என்று?

"நினைந்து நினைந்து" என்னும் பாசுரம் பாடுகின்றவர்கள் என்று சத்திய ஞான தீபம் வைத்த நாள் என்று அறியமுடியவில்லை. அதற்கு ஏன் வாதம் பண்ணிக் கொள்ள வேண்டும்? உள்ளம் என்னும் தகழியில் ஆன்ம அறிவு என்னும் விளக்கினை ஏற்றி அதனுள் அருட்பெருஞ்ஜோதியரை உளம் உருக, ஆன்ம நெகிழ்ச்சியோடு வழிபட அனைவரும் வரட்டுமே! தீபம் வைத்த நாள் புனர்பூசமாகட்டும், முழுமதியாகட்டும் அதனால் என்ன?

### 45. திருக்காப்பிட்டது சரியா?

அடியவர்கள் பலரும் வெளிப்படையாக மறைய வள்ளலார் மட்டும் கதவை பூட்டிக் கொள்ளச் செய்தது மறைந்தது சரியா? உள்ளே சென்று மறைந்தது சந்தேகத்தைக் கொடுக்கவில்லையா? என்கின்றனர். ஆமாம் வள்ளல்

இருக்கும்போதே இப்படிப் பல தடவை மறைந்திருந்தார்களே அப்போது யாரைப் போய்க் கேட்டார்கள்? இந்த கேள்வி எல்லாம்.

இப்போதும் ஞான உடலுடன் வள்ளல் மறைந்து விளங்குகின்றார்கள். மறையும்போது அன்பர்களுக்கு அச்சமும் கவலையும் ஆற்றாமையும் ஆயுள் முடிவும் ஏற்பட்டு விடக் கூடாதே என்பதனால் தான் அப்படிச் செய்தார்கள். அதனை யூகிக்காமல் வாய்வாதம் பேசுவது கூடாத ஒன்றாகும்.

### 46. சன்மார்க்கத்தில் சமய நிலைகள் சரியா?:

பட்டை, கொட்டை, மொட்டை. கட்டை, பஞ்சகச்சம், குடுமி, பூணூல் இத்தகைய சமயச் சின்னங்களும் நாள், நட்சத்திரங்களும், அதன் சுற்று நிலைகளும் தேவையா எனச் சன்மார்க்க அன்பர்கள் கேட்டபடி உள்ளனர். அத்துடன் நாத்திகம் பேசும் நிலை கூட சன்மார்க்கத்தில் புகுந்து கொண்டது. சுயமரியாதை இயக்க உணர்வுகள் சன்மார்க்கத்தில் தம் பதிவுகளை உண்டாக்கியுள்ளது. அவற்றில் ஒன்று மறுபிறப்பு இல்லை என்று நம்புகின்றனர். சன்மார்க்க செயல்பாட்டை கண்டு கேட்டு உணர்ந்து நடக்க விரும்பும் புதிய சன்மார்க்க வருகையாளர்கள் இந்தக் கூத்தை எல்லாம் பார்த்து முன்னிருந்த நிலையிலும் பின் ஏற்பட இருக்கும் நிலையிலும் குழம்பி நாத்திகம் பேசி நாத்தழும்பு ஏறுகின்றனர். சமயம் எது மதம் எது என்ற விவரம் அறியாமல் மற்றும் அறிவிக்காமல் புதியவர்களை அறைகுறையாக்கும் சூப்பர் சன்மார்க்கிகளாகிய நாம் யூனிவர்சல் சூப்பர் சன்மார்க்கிகள் ஆவது நிச்சயம்.

### 47. தவமும் யோகமும் தியானமும் போதாதா?:

போதாது. தோத்திரம் செய்து உள்ளம் உருக வேண்டும். நெகிழ வேண்டும். உயிர் இரக்கத்தால் ஆன்மா கன்றின் உள்ளம் போல் கசிந்து உருக வேண்டும். அப்படிச் செய்யாமல் பலபட பயிற்சி தந்தாலும் பயின்றாலும் ஒரு பதிவும் கடவுள் சமூகத்தில் உண்டாகப் போவதில்லை. அப்படி இருக்க தவம் யோகம் எதற்கு?

### 48. ஞான சரியை ஓதினால் சித்தி கிடைக்காதா?:

ஒன்றும் கிடைக்காது. அது வள்ளல் உலக மக்களுக்கு உபதேசித்த பாடல்கள். அதை நாமும் ஓதவோ உபதேசிக்கவோ கூடாது. உண்மையை உணர அது பாடப்பெற்றுள்ளது. முதல் பாட்டில் கண்டுள்ளபடி கண்ணீர் சிந்தித் தோத்திரம் செய்து தன்னை இழந்து பொற்சபை தரிசித்து மேல் அனுபவம் பெறுதல் வேண்டும். அதைவிட்டு 1008 முறைகூட ஞானசரியை ஓதினால் ஒரு பயனும் உண்டாகப் போவதில்லை. இரக்க உணர்வு எல்லையற்றுப் பெருகாது ஆவேசமாக அகமுருகப் பாடுவதால் ஆண்டவருக்கும் பயனில்லை. ஆருயிர்க்கும் பயனில்லை. தன் ஆன்மாவிற்கும் பயனில்லை.

### 49. சபையில் சிவலிங்கப் பூசை அவசியமா?:

கூடாதுதான். 12 வயதிற்கு மேம்பட்டவரும் 72 வயதுக்குட்பட்டவரும் சபை பூசை செய்யக் கிடைக்காதபோது தற்போது பூசை செய்கிறவர் உடலும் மனதும்

உணர்வும் உயிரும் சுத்தமாக இருக்க ஏதேனும் ஒருபாவனை பூசை செய்தால்தான் தூய்மை சிறிது நேரமாவது நிற்கும். அதற்கு வழிசெய்யும் ஜீவனே சிவலிங்க மாகக்கருதும் பூசை இருக்கலாம். அந்தப் பூசை என்ன? பஞ்சமாபாதகமா? வீட்டில் வைத்து பூசை செய்துவர யாராவது ஐயரிடம் பேசிப் பார்த்தாயிற்றா? அவர் மறுதலித்தாரா? வேண்டிக் கொண்டோமா? புறத்தில் இருந்து பொருமினால் வாய்தான் வலிக்கும்.

## 50. உபகாரம் இல்லாத விழாக்கள் உதவுமா?:

நாடெங்கிலும் சன்மார்க்க விழாக்கள் நடைபெற்று வருகின்றன. நான்கு பக்கத்திற்குக் குறையாமல் அழைப்பிதழ். வி.ஐ.பி.க்கள் அழைப்பு போல அமைப்பு. போல அமைப்பு. ஊர்வலம், பட்டிமன்றம் முதலிய பிரமாதங்கள். இதனை எல்லாம் கேட்க ஏதோ ஒரு சிலர் ஓரளவில் பலர், கொட்டும் முழக்கும் கோலாகலந்தான். இந்த ஏழைகளுக்கு என்ன வேணும்?

சோறுதானே! விழாவில் ஒரு பகுதி கூட அதற்குச் செலவிட மனமில்லை. வள்ளலைப் பாமரர்களுக்கு அறிமுகப்படுத்தாத விழா சல்லிக் காசுக்கும் பயனில்லை

## 51. மாநாடு அவசியமா?

சன்மார்க்க உலகில் மாநாடுகள்தான். மந்திரிகள் வருகைதான் ஆட்டமும் கூட்டமும்தான். அடித்தும் ஆராவரித்தும் பேசும் உணர்வுகள்தான். அதனால் சமுதாயப் பயன் என்ன? எதுவுமில்லை. எளியவருக்கு மாநாடுகள் என்ன செய்திருக்கின்றன? வள்ளல் விரும்பாத அரசியல் உலகம் போல மாநாடுகள் போட்டுக் கொண்டே வந்தால் கடப்பாறை தேய்ந்து குடைக்கம்பி ஆனது போலத்தான்.

## 52. மலர் வெளியீடு தேவையா?

இன்னார் இனியார் என்ற பாகுபாடு இல்லாமல் செல்வர்களை அணுகி விளம்பரம் தேடுகின்றனர். சன்மார்க்கிகள். வேண்டிய பணம் கிடைக்கிறது. வல்லவர் எழுதித் தீர்க்கின்றார். வகை தெரிந்தவர் அதைக் காசு ஆக்குகின்றார். அடிமட்ட சமுதாயத்திற்கு ‘அ’ என்று எழுத்தைப் பற்றிக்கூடத் தெரியாது. அப்படி இருக்க மலர் வெளியிடும் மனம் நமக்கு ஏன்?

## 53. நூல்கள் அச்சடிக்கலாமா?

மாநாட்டு மலர் போய் சன்மார்க்க உலகில் நூல்கள் அச்சேறி ஏணி வைத்து எடுக்க முடியாத இடத்திற்குப் போய்க் கொண்டிருக்கிறது. அருட்பாவைப் படிக்கவே ஆள் தேட வேண்டியுள்ளது. அந்த நிலையில் அது இது என்று எழுதித் தள்ளுகிறோம். கடலில் கரைத்த பெருங்காயம் போலத்தான். சமுதாய வளர்ச்சி சமுதாயப் பயன் அதனால் ஏதேனும் உண்டாகுமா? ஏதுமில்லை. அப்படி இருக்க நமக்கு அச்சு ஆசை இருந்தால் போதுமா?

## 54. விளக்க உரைகள் தேவையா?

திருவருட்பாவின பகுதிகளுக்கு விளக்க நூல்கள் வெளிவருகின்றன. அருட்பெருஞ்ஜோதி அகவலுக்குக் கருத்துரை விளக்கவுரை நூல்கள் எண்ணிக்கையை தாண்டிவிட்டது. ஆளுக்கொரு கருத்துச் சொல்லி வருகின்றோம். போதாக்குறைக்கு அச்சேற்றம் வேறு. அபாரமான விலை வேறு. விழா வேறு. முதல் பிரதி வாங்குபவர் வேறு. முன் பதிவு வேறு. இப்படியே சென்றால் வாணிப நோக்கந்தான் நிறைவேறும். மற்ற நோக்கங்கள் அடிபட்டுப்போகும்.

## 55. கூச்சலும் குழப்பமும் குறைபாடும் சரியா?:

சாலை. சபை, சித்திவளாகம் வழிபடுகிறோம். அங்கங்கே அமைதியின் அத்துமீறல்களும் ஒழுக்கபழக்கச் சிதைவுகளும் உண்டாகி அமைதி வழிபாட்டை அலைக்கழிக்கின்றன. இவை எல்லாம் வடலூரில்தான் சன்மார்க்கத்தில்தான்? என்னய்யா உங்கள் சன்மார்க்கம் என உயிர்த்துடிப்புடன் யோசிக்கின்றவர்களைப் பார்த்திருக்கலாம். அத்தகையவர்கள் தோசை சாப்பிடுவதை விட்டுவிட்டு அது வட்டமாக இல்லையே என்று அலைகின்றார்கள். கன்று பசுவைத் தேடும். காதலி காதலனைத் தேடுவாள். குழந்தை தாயைத் தேடும். அப்படி நாம் வள்ளலைத் தேடுவதை விட்டுவிட்டு அங்கே சத்தம் இங்கே சச்சரவு அங்கே பொத்தல் இங்கே புகைச்சல் என்றால் உருப்படியாக ஒன்றும் ஆகப்போவதில்லை. வள்ளலும் கூச்சல் குழப்பம் இருக்கும். அதைப் பாராட்ட வேண்டாம் என்றார்கள். அதைத் தெரியாமல் அலட்டிக் கொள்ளக் கூடாது.

## 56. சாலையைக் கோயில் என்றுக் கூறலாமா?

உள்ளம் பெருங்கோயில்: திருந்தும் என் உள்ளத்திருக்கோயில் ஞானசபை. சபையாகிய கோயிலை மணியாலும் பொன்னாலும் அலங்கரியுங்கள். கோயில் எல்லாம் கொடி நாட்டக் கண்டேன். 1008 மாற்றுப் பொற்கோயில் இருந்தடி என்னும் திருவார்த்தைகளை வள்ளலே சொல்லி இருக்க அது சமயச்சொல் எனத் தள்ளும் நாம் தள்ளுண்டு தான் போவோம்.

## 57. எல்லா உயிரும் இன்புற்றிருக்க பிரார்த்தனை செய்வது போதாதா?:

எல்லா உயிரும் இன்புற்று இருக்க என வழிபட்டு தானும் இன்புற்று இருப்பது போதுமே! ஏன் உணவு தேடவேண்டும்? உணவு இல்லாவிட்டால் புளியம் பூ போல உதிர்ந்து விடுவோம். வாய்மொழி முழக்கம் கேட்டு ஆண்டவன் ஆனந்தப்படமாட்டான். செய்யும் செயலைக் கொண்டே ஆனந்தப்படுவான். ஆதலின் உயிர்கள் இன்பமடைய கொலைபுலை நீக்குவதுடன் நீங்கச் செய்வதும் மிக அவசியம். அதன்படி நடக்காவிட்டால் ஆகாயக் கோட்டை கட்டினதுதான் மிச்சம்.

## 58. ஜோதி தரிசனத்திற்கு மணி அடித்தல் சரியா?

பல்லாயிரக் கணக்கில் 1/2 கிலோ மீட்டர் தூரத்திற்கு மேல் ஜோதி தரிசனத்தை ஆவலுடன் காண மக்கள் கூடி உள்ளனர். ஜோதி தரிசனம்

ஆரம்பித்துவிட்டது என்பது முதலாக முடிந்துவிட்டது வரை மணி அடிக்கப்படுகிறது. அது அவசியமல்ல என்று அற்புத சுத்த சன்மார்க்கிகள் சொல்லி வருகின்றனர். எதுவுமே வேண்டாம் என்றால் எளியவர் பாமரர் கல்லாதவர் தொடக்க நிலையினர் சமயமத சன்மார்க்கிகள் வயோதிகர்கள் அழுந்திய உணர்வுடையோர், ஆரவாரப்பேச்சில் ஈடுபடுவோர் இவர்களை அட்டஷனுக்கு கொண்டு வரவே மணி அடிக்கப்படுகிறது. முதலில் எச்சரிக்கை மணி. முடிவில் பூசை மணி நமக்கு மணியில் மனம் செல்வானேன்? அலைபடுவானேன்? ஐயா திருவடியிலும் அருட்பெருஞ்ஜோதி தரிசனம் காண்பதிலும் கருத்து ஒன்றி இருந்தால் மணி அடிப்பதைப் பற்றி நாம் சட்டை செய்யமாட்டோம். அப்படி நாம் எச்சரிக்கை அடையும்படியும் ஆன்ம எழுச்சியை உண்டாக்கவும் மணி அடிக்கலாம். அவ்வாறின்றித் தடம் புரண்டு தடுமாறக் கூடாது.

### 59. அன்னதானத்தின் பேரால் அவுட் விடுதல் சரியா?

1000 பேருக்கு, 10,000 பேருக்கு லட்சம் பேருக்கு அன்னதானம் எனப் பிரசுரிக்கப் போஸ்டர் அடித்து பெருந்தலைவர்களைக் கூப்பிட்டு ஆயிரம் ஆயிரமாக நன்கொடை தந்த சீட்டுகாட்டிச் சித்தாடல் புரிகின்ற செம்மல்கள் நம்மார்க்கத்திலும் உண்டு. பசியோட வந்தாரைப் பார்க்கவும் நேரீர். பழங்கஞ்சியாகிலும் வழங்கவும் நினையீர் என்று அறிவுறுத்தி உள்ளார்கள் வள்ளல். மற்றும் சாலையை இலகுவாக நடத்துங்கள் என்றார்கள். ஆற்று நீரோட்டம் போல அன்னதானம் தொடர்வது நல்லது என்றார்கள். அதுவும் எளியர்களுக்கே முதலிடம் என்று தெரிவித்தார்கள். அதைவிட்டு பிரமிக்கும்படி தானம் செய்து பின்பு படுத்துக் கொள்பவர்கள் பலர் உண்டு. அவர்கள் செய்யும் அன்னதானம் வடலூர் தருமச்சாலை அன்னமிடுதல் போல் தொடர் பணியாக இருந்தால் நல்லது. அப்படி இல்லாமல் அவுட்விட்டு அன்னதானம் செய்யும் செயலைப் பார்க்கும் இறைவர் எரியும் விறகை இழுக்கமாட்டாரா? அதற்கு எவ்வளவு நேரம் ஆகும்?

### 60. முற்றோதல் தகுதியுடையதா?

சபை முன்பு மெல்லெனக் கசிந்து கனிந்து பாடுவதைச் செய்யும்படி தான் ஐயா வரையறை செய்துள்ளார்கள். 10,20, 30 பேர் கூடியும் வேளா வேளைக்கு விருந்து தேடியும் அறிவுதேடல் இன்றி உணர்வில்லாது முற்றோதல் செய்வதால் என்ன பயன்? முற்றிலும் ஓத வேண்டும் என யார் சொன்னார்களோ? தெரியவில்லை. ஆனால் வள்ளல் அது பற்றி ஏதும் சொல்லவில்லையே!

### 61. துப்புரவு தொண்டர்கள் எங்கே?

வடலூரைச் சுத்தமாக வைத்திட வரிந்து கட்டிக் கொண்டு தொண்டர்படைகள் வேலை செய்வது உண்டு. அது ஆரம்பச் சூரத்தனந்தான். அதைவிட்டுத் தொடர்ச்சியாக வடலூரை வடலூர் நிலையங்களை யாரோ சிலர் உண்மையாகத் துப்புரவு செய்து வருகின்றனர். அப்படி இல்லாமல் நாம் ஆரவாரத் துப்புரவு அகிம்சைத் துப்புரவாய் ஆகாமல் போகுமே!

## 62. பல இடத்தில் அன்னதானம் ஏன்?

சத்திய தருமச் சாலைக்கு அனைத்து மக்களும் அனைத்துச் சங்கங்களும் அனைத்து சேவையாளரும் வந்து குழுமி அன்னமிட்டால் எப்படி இருக்கும்? அவரவர் சத்திரத்தில் அவரவர் கூட்டத்திற்கு அன்னதானம் செய்தலால் என்ன பயன்? எனக் கேட்கிறார்கள். அவர்கள் செய்தி சரிதான் என்று வைத்துக் கொண்டாலும் எங்குமாய் விளங்கும் திருச்சபையும் எங்குமாய் விளங்கும் பேர் அருளையும் எங்குமாய் நடந்திடும் அன்னதானத்தையும், எங்குமாய் இயங்கும் மக்கள் கூட்டத்தையும் எங்குமாய் விளங்கி அன்னம் படைப்பதையும் எங்குமாய் கிடைக்கும் தருமப் பயனையும் ஒரே இடத்தில் குவித்தால் தனித்தனி முக்கனிபோல் அனுபவம் கிடைக்காது. விளக்கம் தோன்றாது, பெருமைதான் மிஞ்சும் இரக்க உணர்வு எட்டிப் பார்க்காது. ஆதலின் அதுபற்றி விமர்சிப்பதை விட்டு விடவேண்டும்.

## 63. சமயவாதிகளுக்கு அறிவு மட்டமா?

சமயவாதிகள் சடங்குவழியான வழிபாடு உள்ளவர்கள் சீரிய எண்ணம் கொண்டவர்கள் அல்லர். ஆதலின் அவர்களுக்கு அறிவு குறைவு. சுத்த சன்மார்க்கிகளுக்கு அறிவு அதிகம் என்று நினைப்பவர்களே அதிகம். நான் என்பது யார் என்று சரிவரத் தெரியாத சுத்த சன்மார்க்கிகள் எவ்வளவோ பேர் உள்ளனர். உளறுவாயனைவிட ஊமையனே மேல் என்பார்கள். அதுபோல் சன்மார்க்கம் பேசி சரியான அறிவு வளர முயலாவிட்டால் விமர்சனம் செய்யாமல் இருக்கலாமே?

## 64. வள்ளல் எழுதியதை மாற்றலாமா?

வள்ளலின் பாடல் வரிகள் சில ஐந்து இடையினத்திற்கு வல்லினம். அன்னைக்கு அனை என்பன போன்று வள்ளல் வரைந்தருளியதை மாற்ற மனம் நமக்கு வந்துள்ளது. சான்றாக எல்லையில் பிறப்பெனும் இருங்கடல் என்பதற்குப் பெரிய கடல் என்று பொருளிருக்க இரண்டு கடல் என்பதாக எண்ணி எள்ளி எழுகடல் என திருத்தியுள்ளோம். வள்ளலின் உள்ளமும் வளர்தமிழின் தனித் திறமும் அறியாது கண்டபடி செய்வோமானால் கண்படி திரியவேண்டியதுதான்.

## 65. எல்லா மதமும் சம்மதமா?

சமண சமயத்தில் கடவுள் இல்லை. புத்த சமயத்திலும் கடவுள் இல்லை. கிறித்துவ சமயத்தில் பிறப்பில்லை? முகமதிய சமயத்தில் உருவ வழிபாடு இல்லை. நாத்திகரிடத்தில் கடவுளே இல்லை? இவர்களை எல்லாம் அரவணைத்து ஆள்வதே சன்மார்க்கம் என்று பேசியும் நடந்தும் வருகின்றோம். வேறு வேறான கருத்துகள் கொண்ட சமய மத மக்கள் இடையே நாம் உயிர் நேயம் மற்றும் மனிதநேயம் மட்டுமே பாராட்டக் கடமைப் பட்டுள்ளோம். மற்றபடி கருத்து ஒற்றுமை காண முயன்றால் அது இலவுபழுத்த நிலையாகிவிடும்.

## 66. வடலூர் எங்கே உள்ளது?

வடலூர் எங்குள்ளது? இராமலிங்க சுவாமி என்பவர் யார்? அவரது வழி என்ன? அவர் எழுதிய நூல் என்ன? அவரது சித்தி என்ன? என்பது ஒன்றும்

அறியாமல் காலம் கழிக்கின்ற பாமர மக்கள் கோடிக் கணக்கில் உள்ளனர். ஆனால் ஒரு பிள்ளையாரை, ஒரு கிருஷ்ணரை, ஒரு இராமனை, ஒரு சரஸ்வதியை இந்தியா எங்கும் தெரிந்திருக்கிறார்களே அதுபோல் வள்ளலையும் வடலூரையும் அறிமுகம் செய்விக்க நாம் முயற்சி செய்யாமல் கூச்சல்களை எழுப்பி வந்தோமானால் எந்த லாபமும் கிடைக்கப் போவதில்லை.

## 67. எப்பொழுது சுத்த சன்மார்க்கம் ஓங்கும்?

திருப்பதிக்கு எவ்வளவு பேர் செல்கின்றனர்? திருத்தணிக்கு எத்தனையோ பேர் செல்கின்றனர்? ஷீரடிக்கு எத்தனை பேர் செல்கின்றனர்? மருவத்தூருக்கு எத்தனை பேர் நடக்கின்றனர்? அண்ணாமலையை எத்தனை பேர் சுற்றுகின்றனர். ஐயப்பன் மலைக்கு எத்தனைபேர் அணிதிரள்கின்றனர்? மலையனூர் அங்காளம்மனை எத்தனைபேர் வழிபடுகின்றனர்? திருவரங்கம் ஏகாதசிக்கு எத்தனை பேர் குவிகின்றனர்? பழநிக்கு எத்தனை பேர் பிரார்த்தனை செலுத்துகின்றனர்? தில்லைத் தரிசனத்திற்கு எத்தனை பேர் வருகின்றனர்? மேல் நாரியப்பனூர் எத்தனை இந்துக்களும் கிறித்துவர்களும் கூடுகின்றனர். வேளாங்கண்ணிக்கு எத்தனை பேர் பயணம் செய்கின்றன்னர்? இவர்கள் எல்லாம் சுத்த சன்மார்க்க வடலூருக்கு எப்போது வரப்போகின்றனர்? அதை எண்ணாமல் புலைகொலை நீத்து உயர்நேயம் காத்து வாழ்ந்தால் போதாதா? அதை எண்ணாமல் சுத்த சன்மார்க்கம் பற்றிச் சும்மா பேசிக் கொண்டிருப்போமானால் எந்தச் சுவடுமின்றி இந்தப் பூமியிலிருந்து கண்காணாமலேயே போய்விடுவோம்.

**-திருச்சிற்றம்பலம்.**

## <u>சன்மார்க்க உலக நீதி</u>

1. விபூதி பூசல் வேண்டாம்.
2. ஆலயம் செல்லல் வேண்டாம்.
3. உருவ வழிபாடு செய்தல் வேண்டாம்.
4. நைவேத்தியம் படைத்தல் வேண்டாம்.
5. மணி அடித்தல் வேண்டாம்.
6. கற்பூரம் காண்பித்தல் வேண்டாம்.
7. ஐந்தாம் திருமுறை ஓதுதல் வேண்டாம்.
8. சாலை சபையை வணங்குதல் வேண்டாம்.
9. கீழே விழுந்து நமஸ்கரிக்க வேண்டாம்.
10. முடிவளர்த்தல் வேண்டாம்.
11. முக்காடின்றி இயங்கல் வேண்டாம்.
12. புஷ்ப அலங்காரம் பண்ணுதல் வேண்டாம்.
13. கற்பூரம் ஏற்றுதல் வேண்டாம்.
14. ஜோதி தரிசனம் செய்தல் வேண்டாம்.
15. சோறு போட்டுக் கொண்டே இருக்க வேண்டாம்.
16. கொலைபுலை தவிர்க்க கூச்சல் போட வேண்டாம்.

**இத்தனையும் விட்டு விட்டால் என்ன ஆவோம்?**
**சுவரில் தான் முட்டிக் கொள்வோம்.**
**சுவடின்றிக் காணாமல் போய்விடுவோம்.**

## உணர்வுத் தகவல்கள்

1. நீக்கு போக்கு இல்லாமலும் தாக்கு தகவல் இல்லாமலும் சுத்த சன்மார்க்கத்தைப் போதிக்கப் பலர் திரண்டு வருகின்றனர்.

2. சுத்த சன்மார்க்கத்திற்கும் ஐம்பொறிகளை வெல்லுதல் வேண்டும்.

3. ஐம்புலன்களைச் ஜெயித்தல் வேண்டும்.

4. நால்வகை மனவகைகள் அடங்குதல் வேண்டும்.

5. உள்ளத்தில் தன்முனைப்பு ஒழிதல் வேண்டும்.

6. உண்மை கருத்து ஓங்குதல் வேண்டும்.

7. ஜீவ விளக்கம் பெறுதல் வேண்டும்.

8. ஆன்மாவை அறிதல் வேண்டும். அதனுடன் ஆருயீர் நேயராதல் வேண்டும்.

9. அப்படியார் அகமும் புறமும் ஒத்துவாழ்கின்றார்களோ அவர்களே சுத்த சன்மார்க்கிகள். அவர்கள் தெரிவிப்பதே உண்மைத் தகவல்கள். அவையே தன்னுர்வுத் தகவல்கள். மற்றவையெல்லாம் பொய் வேடம் தரித்தவையே! காணாமல் போகும் கருத்துக்களே.

**திருச்சிற்றம்பலம்**

*****